# அவசர இயற்கை அழிவுப் புனரமைப்பு செயற்திட்டம் (மத்திய, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்கள்) - 2012

## 1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும் இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகக் காட்டுகின்றன என்றும்,

(ஆ) எதன் பொருட்டு நிதி வழங்கப்பட்டதோ அதன் பொருட்டே அது பயன்படுத்தப்பட்டன என்றும்,

(இ) 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போது கட்டுநிதி நிதியக் கணக்கிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட புத்தங்கள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாகக் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளின் படி, மீளளிப்புகளுக்கான விண்ணப்பங்களை ஆதாரப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) நியாயமான முறையில் நம்பகத்தன்மையுடன் காணப்பட்டன என்றும்,

(உ) எனது கடந்த ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட நிதியளிப்பு கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் தகவல்களின் படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டச் செலவினம் ரூபா 3,886,812,285 ஆகக் காணப்பட்டதுடன் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான திரண்ட செலவினம் 3,928,393,818 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பன கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| செலவின விடயம் | 2012திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | 2011திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஒரு மாத காலத்திற்கான செலவினம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் | 3,442,872,615 | 40,078,124 | 3,482,950,739 |
| உபகரணங்கள் - நீர்ப்பாசனத் திணைக்களம் | 136,698,530 | - | 136,698,530 |
| கடப்பாட்டுக் கட்டணங்கள் | 831,479 | - | 831,479 |
| வட்டி | 123,363 | - | 123,363 |

| | | | |
|---|---|---|---|
| நிருவாகக் கிரயம் | 306,286,298 | 1,503,409 | 307,789,707 |
| மொத்தம் | **3,886,812,285** | **41,581,533** | **3,928,393,818** |

## 2.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தவல்களின்படி, மீளாய்வாண்டிற்கான கட்டுநிதி நிதியக் கணக்கின் செயற்பாடுகள் மற்றும் அத்திகதியில் உள்ளவாறு அக் கணக்கில் காணப்பட்ட மீதிகள் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| | 2012 | |
|---|---|---|
| | **ஜப்பான் யென்** | **ரூபா** |
| 2012 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 3,284,749,693 | 4,818,399,324 |
| கூட்டு: மீள் நிரப்பல்கள் | 1,015,525,398 | 1,636,446,525 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | _ | 148,580,724 |
| | 4,300,275,091 | 6,603,426,573 |
| கழி: பற்றுதல்கள் | 2,253,673,948 | 3,574,661,542 |
| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 2,046,601,143 | 3,028,765,031 |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 3.1 ஒப்பந்த நிருவாகம்

### வீதிகளின் புனரமைப்பு- வீதி அபிவிருத்தி அதிகாரசபை

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகார எல்லையின் கீழ் வருகின்ற 18 வீதிகள் இச் செயற்திட்டத்தின் கீழ் புனரமைப்பதற்காக இனங்காணப்பட்டிருந்ததுடன் அதில் 05 வீதிகள் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது.

மேற்கூறப்பட்ட புனரமைப்பு வேலை தொடர்பான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) அம்பதென்ன – பொக்காவெல - அறம்பகடை வீதி (0 - 1 கிலோமீற்றர்) இல. ஆர்டீஏ/டீடபிள்யூ/சீபீ/ஜீஓஎஸ்எல்/2011/249

மேற்கூறப்பட்ட ஒப்பந்தம் 2012 மே 05 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பௌதீக செயல்முன்னேற்றம் 55 சதவீதமாக மாத்திரம் இருந்தது. எவ்வாறாயினும் ஒரு நாளைக்கு ரூபா 19,000 படி அறவிட வேண்டிய தாமதக் கட்டணம் ஒப்பந்தகாரரின் பகுதிக் கொடுப்பனவுகளிலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் அபிவிருத்தி செய்யப்பட்ட வடமத்திய மாகாணத்தின் வீதி தொடர்பான பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

அந்தரவெவ - பலலுவெவ வீதி புனர்நிர்மாணம் செய்தல் இல. ஆர்டீஏ/டீடபிள்யூ/என்சீபீ/ஜேஜசீஏ/2011/07 (28+000-36+500 கிலோமீற்றர்)

இந்த வீதியின் 37/1 என்ற இடத்தில் நிர்மாணிக்கப்பட்ட பாலத்தின் வீதியின் இருபக்கமும் பாலத்தை விட உயர்வாக நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதன் விளைவாக பாலத்தின் இருபக்கமும்

எஸ்போட் செய்யப்பட்ட வீதியின் ஓரத்தில் 40 மீற்றர் பகுதியில் எஸ்போட் செய்யப்பட்ட வீதி கீழிறங்கியிருந்தது. இப்பகுதி வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக சரிசெய்யப்பட வேண்டும்.

## 3.2 மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் வீதிகளைப் புனர்நிர்மாணம் செய்தல் - வடமத்திய மாகாணம்

வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் புனர்நிர்மாணம் செய்வதற்காக 25 வீதிகளும் 03 பாலங்களும் இனங்காணப்பட்டிருந்ததுடன் அதில் 08 வீதிகளும் ஒரு பாலமும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்தது. எனினும் 04 வீதிகளும் ஒரு பாலமும் பூர்த்திசெய்யப்படாதிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இந்த ஒப்பந்தம் தொடர்பான பௌதீக செயல்முன்னேற்றம் 40 சதவீதம் தொடக்கம் 82 சதவீதம் வரை மாத்திரம் இருந்தது.

மேற்கூறப்பட்ட வேலை தொடர்பான பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கஹடகஸ்திகிலிய – கோன்வெவ – தெமடவெவ (7+950) பாலம், இல. பீஆர்டீஏ/என்சீபீ/ஏ/எம்/பீ16

மேற்கூறப்பட்ட பாலத்தின் புனர்நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் ரூபா 46,684,450 ஒப்பந்தத் தொகையில் 2012 யூன் 15 ஆந் திகதி ஒப்பந்தக்காரரொருவருக்கு கையளிக்கப்பட்டிருந்துதுடன் அது 2013 ஏப்ரல் 15 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்வதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) நிர்மாணத்திட்டங்களை வரைந்து தயாரிப்பதற்காக ரூபா 1,994,831 ஒப்பந்தத் தொகையில் ஆலோசனை நிறுவனமான மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் (சீஈசீபீ) நியமிக்கப்பட்டிருந்ததுடன் அத்தொகையில் ரூபா 1,895,090 நிறுத்திவைத்தல் பணம் கழிக்கப்படாது 2012 ஏப்ரல் 05 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது.

(ii) பாலத்திற்காக தயாரிக்கப்பட்ட வரைபடம் அச்செயன்முறைகளின் போது அடிக்கடி திருத்தம் செய்யப்பட்டிருந்ததுடன் ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டுள்ள பாலத்தின் அடித்தளமும் திருத்தப்பட்டிருந்தது.

(iii) நிர்மாணங்கள் 2013 ஏப்ரல் 15 ஆந் திகதி வரையில் பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் திருத்தப்பட்ட வரைபடம் 2013 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் ஆலோசனையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ஆரம்பத் திட்டம் மாற்றப்பட்டு புதிய திட்டத்தின் பிரகாரம் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டு அதற்காக ரூபா 12,456,728 தொகை செலவிடப்பட்டிருந்தது. இருந்த போதிலும் அந்த வேலைகளின் அங்கீகாரம் முரண்களுக்காக மாத்திரம் பெறப்பட்டிருந்தது.

(v) பாலத்தின் நிர்மாணத்திற்காக ஆலோசனை வழங்கிய மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் பொறியியலாளரின் கவனமின்மை, அவர்களினால் அடிக்கடி வழங்கப்பட்ட நிர்மாணத் திட்டத்தின் திருத்தம் தொடர்பாக ஒப்பந்த வேலைத்தளத்தில் பேணப்பட்ட சம்பவத் திரட்டுப் புத்தகத்தில் இடப்பட்டுள்ள குறிப்புக்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. அந்நிறுவனத்தினால் செயற்திட்டத்திற்கு ஏற்பட்ட நட்டத்திற்கான பொறுப்பைக் கையளிப்பதற்காக எப்படிமுறையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கஹடகஸ்திகதிலிய - கோன்வெவ - தெமடவெவ வீதி (7 கிலோமீற்றர் - 11 கிலோமீற்றர்) இல. பீஆர்டீஏ/என்சீபீ/ஏ/எச்/பீ15

---

மேற்கூறப்பட்ட வீதியின் 04 கிலோமீற்றரை புனரமைப்புச் செய்வதற்காக ஒப்பந்தக்காரருடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 85,047,467 தொகையான இணங்கப்பட்ட பெறுமதியில் 2012 யூன் 30 ஆந் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டு 2013 மார்ச் 15 திகதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒப்பந்தத்திற்கான காலநீடிப்பு 2013 யூன் 15 வரை 61 நாட்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2013 ஆகஸ்ட் 01 ஆந் திகதியில் உள்ளவாறு ஒப்பந்தத்தின் பௌதீக செயல்முன்னேற்றம் 49 சதவீதமாக மாத்திரம் இருந்தது.

(ii) வீதிப் புனரமைப்பின் போது 2012 திசெம்பர் மாதத்தில் வெள்ளத்தினால் கழுவிச் செல்லப்பட்டு சேதம் ஏற்பட்டிருந்த போதிலும் 7+560 கிலோமீற்றர் தொடக்கம் 8+400 கிலோமீற்றர் வரை மாற்றப்பட்டிருந்த திட்டம் 2013 யூன் 15 ஆந் திகதி வரை ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வீதியைப் புனரமைப்புச் செய்யும் போது 2012 திசெம்பர் மாதத்தில் வெள்ளத்தினால் கழுவிச் செய்யப்பட்டு பாதிப்பு ஏற்பட்டிருந்த போதிலும் 8+600 கிலோமீற்றர் தொடக்கம் 11+000 கிலோமீற்றர் வரையான பகுதிக்கான திருத்தப்பட்ட திட்டம் 2013 மார்ச் மாதத்தின் போது வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2013 ஆகஸ்ட் வரையிலும் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சீப்புக்குளம் - கலென்பிந்துனுவெவ வீதி (14.கி.மீ – 17. 960 கி.மீ)
இல. பீஆர்டீஏ/என்சீபீ/ஏ/எச்/பீ10

-----------------------------------------------------------------------------------------------------------------

ஓப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2012 திசெம்பர் 01 ஆந் திகதியளவில் வேலை பூர்த்திசெய்யப்பட வேண்டும். எனினும் ஒப்பந்தக் காலத்தை நீடிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட காரணங்களை உறுதிப்படுத்தாமல் ஒப்பந்தத்தைப் பூர்த்திசெய்யும் காலம் 05 மாதத்திற்கு மேற்பட்ட காலத்தினால் நீடிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் 2013 ஆகஸ்ட் 28 ஆந் திகதி வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தக்காரரிடமிருந்து தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் நீடிக்கப்பட்ட ஒப்பந்தக் காலப்பகுதிக்காக காப்புறுதி மேவுகை ஒப்பந்தகாரரிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

## 3.3 மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழான வீதிப் புனரமைப்பு - மத்திய மாகாணம்

மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் அபிவிருத்தி செய்வதற்காக 24 வீதிகள் இனங்காணப்பட்டிருந்தது. அதில் 13 வீதிகளை அபிவிருத்தி செய்தல் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 07 வீதிகளின் புனரமைப்புத் தொடர்பான செயல்முன்னேற்றம் 42 சதவீதத்திலிருந்து 75 சதவீதம் வரை மாத்திரம் காணப்பட்டது.

## 3.4 மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழான வீதிப் புனரமைப்பு - கிழக்கு மாகாணம்

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் அபிவிருத்தி செய்வதற்காக 41 வீதிகள் இனங்காணப்பட்டிருந்தது. அதில் 08 வீதிகளை அபிவிருத்தி செய்தல் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 08 வீதிகளின் புனரமைப்புத் தொடர்பான செயல்முன்னேற்றம் 40 சதவீதத்திலிருந்து 90 சதவீதம் வரை மாத்திரம் காணப்பட்டது.

## 3.5 நீர்ப்பாசன வேலை புனரமைப்பு - நீர்ப்பாசனத் திணைக்களம்

நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் அபிவிருத்தி செய்வதற்காக இனங்காணப்பட்ட 540 நீர்ப்பாசன வேலைகளில் 38 வேலைகளை அபிவிருத்தி செய்தல் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டும். எனினும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 17 வேலைகளின் புனருத்தாபனம் தொடர்பான செயல்முன்னேற்றம் 48 சதவீதம் முதல் 85 சதவீதம் வரை மாத்திரம் காணப்பட்டது.

## 3.6 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் 2002 நவம்பர் 28 ஆந் திகதியி ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் கணனி மற்றும் உபபாகங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் அந்த செயற்திட்டத்திலுள்ள ரூபா 53,133,475 பெறுமதியான சொத்துக்கள் தொடர்பாக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

## 4.1 நிதியத்தின் பயன்பாடு

செலவினப் பங்கீட்டுத் திட்டத்தின் பிரகாரம், யென் 8,313 மில்லியன் (ரூபா 10,886 மில்லியன்) தொகையான மொத்த நிதிகள் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 வரை 06 வருடங்களில் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டிற்காக செயற்திட்டத்திற்கு ரூபா 4,059 மில்லியன் தொகை தேசிய வரவு செலவுத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 3,887 மில்லியன் அல்லது நிதியேற்பாட்டு நிதியில் 96 சதவீதம் மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்தது. நிதிகளின் பயன்பாடு தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| மூலம் | வழங்குவதற்கு இணங்கப்பட்ட தொகை | | 2012 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு நிதியேற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பயன்படுத்தப் பட்ட தொகை | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட செலவினம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா. மில். | ரூபா. மில். | ரூபா. மில். | ரூபா. மில். | ரூபா. மில். |
| ஜேஐசீஏ | 7,000 | 9,161 | 3,670 | 3,581 | 3,620 |
| ஜீஓஎஸ்எல் | 1,313 | 1,725 | 389 | 306 | 308 |
| மொத்தம் | 8,313 | 10,886 | 4,059 | 3,887 | 3,928 |

## 4.2 பௌதீக செயலாற்றல்

வெள்ளத்தினால் பாதிப்பிற்குள்ளான 111 வீதிகள் மற்றும் 599 நீர்ப்பாசன வேலைகளின் புனருத்தாபன வேலைகள் ஈஎன்டீஆர்பீ கீழ் புனரமைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அந்த 35 வீதிகளினதும் புனரமைப்பு வேலைகள் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்படவேண்டிய போதிலும் அந்த 16 வீதிகளினதும் புனரமைப்பு வேலைகள் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. சில வீதிகளின் பௌதீக செயல்முன்னேற்றம் 40 சதவீத நிலையில் மாத்திரம் காணப்பட்டன.

புனரமைப்பதற்கு திட்டமிடப்பட்ட 599 நீர்ப்பாசனங்களில் 56 நீர்ப்பாசனங்களின் புனரமைப்புக்கள் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் அதில் 26 நீர்ப்பாசனங்களின் புனரமைப்பு வேலைகள் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்திசெய்யப்படாதிருந்ததுடன் சில புனரமைப்பு வேலைகளின் செயல்முன்னேற்றம் 48 சதவீத நிலையில் காணப்பட்டது. விபரம் பின்வருமாறிருந்தது.

| | புனரமைப்பு செய்வதற்கு திட்டமிடப்பட்ட எண்ணிக்கை | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | 2012 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு பட்டியலிடப்பட்ட வேலை தொடர்பாக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயல் முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | பூர்த்தி செய்யப்பட வேண்டிய திட்டம் | பூர்த்தி செய்யப்பட்டது | வேலைகளின் எண்ணிக்கை | செயல் முன்னேற்றத்தின் வீச்சு |
| <u>வீதிப் பிரிவு</u> | | | | | |
| ஆர்டீஏ | 18 | 05 | 05 | - | - |
| பீஆர்டீஏ-சீபீ | 24 | 13 | 06 | 07 | 42% - 75% |
| ஈபீ | 41 | 08 | 04 | 04 | 40% - 90% |
| என்சீபீ | 28 | 09 | 04 | 05 | 40% - 82% |
| மொத்தம் | 111 | 35 | 19 | 16 | |
| நீர்ப்பாசனப் <u>பிரிவு</u> | | | | | |
| நீர்ப்பாசனத் திணைக்களம் | 540 | 38 | 21 | 17 | 48% - 85% |
| பீஜடீ- என்சீபீ | 38 | 04 | - | 04 | 75% - 98% |
| -ஈபீ | 21 | 14 | 09 | 05 | 78% - 96% |
| மொத்தம் | 599 | 56 | 30 | 26 | |